
இன்று தெரிந்து கொள்ளுங்கள்!
பாடம் 13 டிசம்பர் 27, 2025





"கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்;. . . . நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம்"


(யோசுவா 24:15)



யோசுவா தன் முடிவு நெருங்கிவிட்டதாக உணர்ந்தார். அவர் நல்ல போராட்டத்தை போராடினார். அவர் ஓட்டத்தை முடித்துவிட்டார். அவர் விசுவாசத்தைக் காத்துக்கொண்டார். பவுலைப் போலவே, அவரும் நீதியின் கிரீடத்தை நம்பிக்கையுடன் எதிர்ப்பார்த்திருக்கலாம் (2 தீமோ. 4:7-8).

ஆனால், காலேபை போலவே, மற்றவர்கள் அந்த பொறுப்பை ஏற்றுக்கொண்டு, தேவனுடைய மக்களை சரியான பாதையில் வழிநடத்துவார்கள் என்பதை அவர் உறுதிப்படுத்த வேண்டியிருந்தது.

அந்த காரணத்திற்காக, அவர் விசுவாச உடன்படிக்கையை புதுப்பிப்பதற்காகவும், தேவனுக்கு சேவை செய்யும் வாழ்க்கையை தேர்ந்தெடுக்கும்படி அவர்களை உற்சாகப்படுத்துவதற்காகவும், மக்களை சீகேமில் ஒன்று கூட்டினார்.





- தேவன் எழுதிய கதை (யோசுவா 24:1-13)
- ஒருமைப்பாட்டிற்கான அழைப்பு (யோசுவா 24:14-15)
- ஜனங்களின் தெரிந்துகொள்ளுதல் (யோசு 24:16-21)
- உடன்படிக்கையை புதுப்பித்தல் (யோசுவா 24:22-28)
- கதையின் தொடர்ச்சி (யோசுவா 24:29-33)

# தேவன் எழுதிய கதை



"அப்படியே நீங்கள் பண்படுத்தாத தேசத்தையும், நீங்கள் கட்டாத பட்டணங்களையும் உங்களுக்குக் கொடுத்தேன், அவைகளில் குடியிருக்கிறீர்கள்; நீங்கள் நடாத திராட்சத் தோட்டங்களின் பலனையும் ஒலிவத்தோப்புக்களின் பலனையும் புசிக்கிறீர்கள் என்றார்." (யோசு 24:13)

**தனது கடைசி உரைக்காக யோசுவா தேர்ந்தெடுத்த இடம் ஒரு வரலாற்று சிறப்புமிக்க இடம்: சீகேம் (யோசு. 24:1).**





1. கானானில் ஆபிரகாம் கூடாரம் போட்ட முதல் இடம் (ஆதி. 12:6)
2. கானானில் யாக்கோபு கூடாரம் போட்ட முதல் இடம் (ஆதி. 33:18)
3. யாக்கோபு வாங்கிய ஒரே சொத்து (ஆதி. 33:19)
4. அங்கே யாக்கோபு தனது குடும்பத்தினர் சைத்திருந்த அந்நிய தெய்வங்களை புதைத்தான் (ஆதி. 35:4)





யோசுவா தங்கள் மூதாதையர் தேராகு வழிப்பட்ட "அந்நிய தெய்வங்களை" பற்றி சொல்வதன் மூலம் தனது உரையை தொடங்கினார் (யோசு. 24:2). அங்கிருந்து தேவன் செய்த அனைத்தையும் அவர் தன் சொந்த வார்த்தைகளில் அவர்களுக்கு நினைவூட்டினார்: நான் எடுத்தேன்; நான் கொண்டு வந்தேன்; நான் பலுக செய்தேன்; நான் அனுப்பினேன்; நான் அடித்தேன்; நான் வெளியே கொண்டு வந்தேன்; நான் உன்னை உள்ளே கொண்டு வந்தேன்; நான் அவர்களை விடுவித்தேன்; நான் அவர்களை அழித்தேன்; நான் பிலேயாமுக்கு செவிசாய்க்கவில்லை; நான் உன்னை விடுவித்தேன்; நான் அவர்களை கைவிட்டேன்; நான் குளவிகளை அனுப்பினேன்; நான் உங்களுக்கு தேசத்தை கொடுத்தேன் (யோசு. 24:3-13).





இந்த வரலாற்றில், தலைமுறைகள் ஒன்றன்பின் ஒன்றாக எந்த வேறுபாடும் இல்லாமல் கடந்து செல்கின்றன. அனைவரும் இதில் அடங்குவர். யோசுவாவின் பேச்சை கேட்டவர்கள், "நதிக்கு அப்புறத்திலிருந்து வந்தவர்கள்" அவர்கள் எகிப்திற்கு சென்றார்கள்; மிகுந்த வல்லமையுடன் அங்கிருந்து புறப்பட்டார்கள்; அவர்கள் செங்கடலை கடந்தார்கள்; யோர்தானுக்கு கிழக்கேயுள்ள தேசத்தை கைப்பற்றினார்கள்; கானானை சுதந்தரித்துக்கொண்டார்கள். அவர்களுடைய மூதாதையர்களுடன் தேவன் என்ன செய்தாரோ, அதையே அவர்களுடனும் செய்கிறார், இன்று நம்மோடும் செய்கிறார்.


# ஒருமைப்பாட்டிற்கான அழைப்பு

"கர்த்தரைச் சேவிக்கிறது உங்கள் பார்வைக்கு ஆகாததாய்க் கண்டால், பின்னை யாரைச் சேவிப்பீர்கள் என்று இன்று தெரிந்துகொள்ளுங்கள்; நதிக்கு அப்புறத்தில் உங்கள் பிதாக்கள் சேவித்த தேவர்களைச் சேவிப்பீர்களோ? நீங்கள் வாசம்பண்ணுகிற தேசத்துக் குடிகளாகிய எமோரியரின் தேவர்களைச் சேவிப்பீர்களோ? நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்." (யோசுவா 24:15)



யாக்கோபு பெத்தேலில் தேவனுடன் தங்கள் உடன்படிக்கையைப் புதுப்பிப்பதற்கு முன்பு, தன் குடும்பத்தினரை தங்கள் தெய்வங்களை அடக்கம் செய்யும்படி அழைத்தது போலவே, யோசுவாவும் தேவனுடன் தங்கள் உடன்படிக்கையை புதுப்பிப்பதற்கு முன்பு, மக்கள் தங்கள் தெய்வங்களை கைவிடுமாறு அழைக்கிறார் (யோசு. 24:14பி).

அவர்கள் தேவனுக்கு பயந்து, அவரை உத்தமும் உண்மையுமாய் சேவிக்க வேண்டும்(யோசு. 24:14மு). இது எதைக் குறிக்கிறது?



## தேவனுக்கு பயந்து

- என்னைவிட எல்லையற்ற முறையில் மேலானவராகிய அவருக்கு ஆழ்ந்த மரியாதையை காட்டுவதற்கும், அவரை என் இராஜாவாகவும் ஆண்டவராகவும் ஏற்றுக்கொள்வதற்கும்

## உண்மையான மனதுடன் தேவனுக்கு சேவை செய்ய [ஒருமைபாடு]

- குறைகளற்ற சேவை ("குறைபாடற்றதாக" [முழுமையாக] இருந்தால்தான் இறைச்சிக்காக வெட்டுவதற்கு தகுதியானது என்று வரையறுக்கப்பட்ட விலங்கு இதுபோலவே இருந்தது)

## உண்மையுடன் தேவனுக்கு சேவை செய்ய

- விசுவாசமாகமுள்ளவராகவும், நம்பகமானவராகவும், உண்மையுள்ளவராகவும், மாறாதவராகவும், நிலைத்தன்மை உடையவராகவும் இருப்பது. தேவன் என் வாழ்வில் செய்தவைகளுக்காக அவருக்கு நான் செலுத்தும் நன்றியை என் வாழ்வின் மூலம் வெளிப்படுத்துவது.

# ஜனங்களின் தெரிந்துகொள்ளுதல்



"அப்பொழுது ஜனங்கள் பிரதியுத்தரமாக: வேறே தேவர்களைச் சேவிக்கும்படி, கர்த்தரை விட்டு விலகுகிற காரியம் எங்களுக்குத் தூரமாயிருப்பதாக!"" (யோசுவா 24:16)

யோசுவாவின் அழைபபிற்கு என்ன பதில் கிடைத்தது (யோசு. 24:16)? அந்த மக்கள் அனைவரும் தங்கள் தெய்வங்களுக்கு இல்லை எனக் கூறி, தங்களுக்கு ஒரே ஒரு தேவன் மட்டுமே உண்டு என்பதை ஏற்றுக்கொண்டனர்: "நம்முடைய தேவன்," அவரே தான் அவர்களுடைய மூதாதையர்களையும் அவர்களையும் அந்த நிமிடம் வரை வழிநடத்தி வந்தவர் (யோசு. 24:17-18).

மக்களின் முடிவுக்கு வாழ்த்து சொல்வதற்கு பதிலாக, யோசுவா ஒரு எதிர்பாராத பதிலை அளித்தார்: "நீங்கள் கர்த்தரைச் சேவிக்கமாட்டீர்கள்;" (யோசு. 24:19).

என்ன ஒரு ஏமாற்றம்!


யோசுவா தனது பெற்றொர் இதே வாக்குறுதியை கொடுப்பதை கேட்டிருந்தார் (யாத். 19:8), மேலும், கடந்த 40 ஆண்டுகளாக அவர்கள் அதை மீண்டும் மீண்டும் மீறியதை அவர் பார்த்திருந்தார்.


இந்த கடுமையான பதில் அதன் நோக்கத்தை நிறைவேற்றியது. புதிய தலைமுறையினர் அதே தவறுகளை மீண்டும் செய்யக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தனர் (யோசு. 24:21).



# உடன்படிக்கையை புதுப்பித்தல்


“அந்தப்படி யோசுவா அந்நாளில் சீகேமிலே ஜனங்களோடே உடன்படிக்கைபண்ணி, அவர்களுக்கு அதைப் பிரமாணமும் நியாயமுமாக ஏற்படுத்தினான்.” (யோசுவா 24:25)






தனது உரையை முடிக்கும் விதமாக, யோசுவா அவர்களிடம், “உங்களுக்குள் இருக்கும்” தெய்வங்களை அகற்றிவிட்டு, தங்கள் இருதயங்களை மீண்டும் தேவனிடம் திருப்புமாறு கேட்டுக்கொண்டார் (யோசு. 24:23).

மூன்றாவது முறையாக, ஜனங்கள் தேவனை சேவிப்பதாக உறுதியளித்தனர் (யோசு. 24:24). அந்த உடன்படிக்கை உறுதிப்படுத்தப்பட்டது, மேலும் மோசேயை போலவே, யோசுவாவும் அவர்களுக்கு கட்டளைகளையும் சட்டங்களையும் கொடுத்தார்” (யோசு. 24:25).



தேவனுடனான உடன்படிக்கையானது அவருடனான ஒரு உயிருள்ள உறவை அடிப்படையாக கொண்டது என்பதாலும், அதை வெறும் விதிமுறைகள் மூலம் முழுமையாக வெளிப்படுத்த முடியாது என்பதாலும், அந்த உடன்படிக்கையில் நிலைத்திருக்க அவர்களுக்கு உதவும் தெளிவான நினைவூட்டல்களை விட்டு செல்வது அவசியம் என்பதை யோசுவா புரிந்துகொண்டார்.



அவர் அந்த உடன்படிக்கையை எழுத்துபூர்வமாக பதிவு செய்து, ஒரு நினைவு சின்னத்தை நிறுவினார்: அவர்கள் செய்த உறுதிமொழிக்கு சாட்சியாக இருக்கும் ஒரு கல் (யோசு. 24:26-27).


# கதையின் தொடர்ச்சி


"யோசுவா உயிரோடிருந்த சகல நாட்களிலும், கர்த்தர் இஸ்ரவேலுக்குச் செய்த அவருடைய கிரியைகள் யாவையும் அறிந்து யோசுவாவுக்குப்பின்பு வெகுநாள் உயிரோடிருந்த மூப்பருடைய சகல நாட்களிலும், இஸ்ரவேலர் கர்த்தரைச் சேவித்தார்கள்."

(யோசுவா 24:31)

யோசுவா புத்தகம் 3 அடக்க ஆராதனைகளுடன் முடியடைகிறது. அவற்றில் ஒன்று, நூற்றுக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்பே முன்னறிவிக்கப்பட்டபடி, யாக்கோபின் சுதந்தர பூமியில் யோசேப்பின் அடக்கம் ஆகும் (ஆதி. 50:24-26; யோசு. 24:32).








எகிப்திலிருந்து வெளிவந்த அந்த கலகக்கார தலைமுறை வனாந்தரத்தில் புதைக்கப்பட்டது. ஆனால் புதிய தலைமுறையோ, விசுவாசமற்ற தலைமுறையில் விசுவாசத்துடன் இருந்த யோசுவா மற்றும் எலெயாசார் ஆகியோருடன் சேர்ந்து, தங்கள் சுதந்தர தேசத்தில் புதைக்கப்படவிருந்தது (யோசு. 24:29-30, 33).



இந்த புதிய தலைமுறை விசுவாசமாக இருந்தது (யோசு. 24:31).

ஆனால் அடுத்த தலைமுறையின் நிலை என்ன (யோசு. 2:10-11)?

ஒவ்வொரு தலைமுறையும் தேவனோடு தனக்கென ஒரு உடன்படிக்கையை ஏற்படுத்திக் கொள்ள முடியும். அவர்களின் பெற்றோர் விசுவாசம் சரியான முடிவை எடுக்க அவர்களுக்கு உதவக் கூடும். ஆனால் அந்த முடிவு அவர்களுடையது. இன்று நாமும் நமது முடிவை எடுப்போம்: "நானும் என் வீட்டாருமோவென்றால், கர்த்தரையே சேவிப்போம் என்றான்." (யோசு. 24:15).



“ஒரு போரிலும் தோற்காத நமது தளபதி, தம்முடைய கொடியின் கீழ் அணிதிரண்ட ஒவ்வொரிடமிருந்தும் மனப்பூர்வமான, உண்மையுள்ள சேவையை எதிர்பார்க்கிறார். நன்மைக்கான சக்திகளுக்கும் தீமையின் படைகளுக்கும் இடையே இப்போது நடந்துகொண்டிருக்கும் இறுதி போராட்டத்தில், ஆசாரியர்கள் உட்பட அனைவரும் பங்கேற்க வேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிறார். அவருடைய வீரர்களாகப் பதிவு செய்துகொண்ட அனைவரும், தங்கள் ஒவ்வொருவர் மீதும் சுமத்தப்பட்டுள்ள பொறுப்பு குறித்த ஆழ்ந்த உணர்வுடன், எந்த நேரத்திலும் சேவைக்குத் தயாராக இருக்கும் வீரர்களை போல உண்மையுள்ள சேவையை செய்ய வேண்டும்.”

எலன் ஜி உவைட் (டெஸ்டிமொனிஸ் ஃபார் த சர்ச், அதி. 9, பக். 116)